# தேசபக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:148 ★28.09.2026 ★தமிழ் நாளிதழ் ★திங்கட்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:148 ★28.09.2026 ★TamilDaily ★Monday ★Page-4 ★Price-₹5/- Chennai





## வங்கி ஊழியர்களின் 3 நாள் வேலைநிறுத்தம் ஒத்திவைப்பு: பேச்சுவார்த்தையில் உடன்பாடு

இந்திய வங்கிகள் சங்கம் மற்றும் வங்கி தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு இடையே ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டதைத் தொடர்ந்து, செப்டம்பர் 28 முதல் 30 வரை நடைபெறவிருந்த 3 நாள் நாடு தழுவிய வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக திங்கள்கிழமை முதல் வங்கிகள் வழக்கம்போல் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வாரத்தில் 5 நாட்கள் மட்டுமே வேலைநாட்களாக அறிவிக்கப்பட வேண்டும் மற்றும் அனைத்துச் சனிக்கிழமைகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட வேண்டும் என்ற வங்கி ஊழியர்களின் நீண்டகாலக் கோரிக்கையை ஆராய உயர்மட்டக் குழு உடனடியாக அமைக்கப்படும் என கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இக்குழு வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு, சாத்தியமான மாற்று வழிகளை ஆராய்ந்து முடிவெடுக்கும் எனக் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அதிகாரிகளுக்கான செயல்திறன் சார்ந்த ஊக்கத்தொகை திட்டத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும், 2024 மார்ச் 8 ஒப்பந்தத்தில் உள்ள நிலுவைக் கோரிக்கைகள் குறித்தும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்த இரு தரப்பும் ஒப்புக்கொண்டுள்ளன. அரையாண்டு கணக்கு முடிக்கும் செப்டம்பர் இறுதியில் வேலைநிறுத்தம் அறிவிக்கப்பட்டிருந்ததால் வங்கிச் சேவைகள் பெரிதும் பாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. தற்போது வேலைநிறுத்தம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் திங்கள்கிழமை முதல் வங்கிச் சேவைகள் வழக்கம் போல் தடையின்றித் தொடரும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தவெக சார்பில் 'போதை இல்லா தமிழகம் உருவாக்குவோம்' விழிப்புணர்வு: தாராபுரம் முதல் மதுராந்தகம் வரை சைக்கிள் பேரணி

தமிழகத்தில் போதைப் பொருள் பயன்பாட்டை முற்றிலும் ஒழிக்கும் வகையிலும், இளைஞர்கள் மற்றும் மாணவர்களிடையே ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வலியுறுத்தும் நோக்கிலும் தவெக சார்பில் 'போதை இல்லா தமிழகம் உருவாக்குவோம்' என்ற விழிப்புணர்வு சைக்கிள் பேரணி தாராபுரத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

இதன் தொடக்க விழா பொது மக்களுக்கு போதைப் பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்தும், சமூகப் பாதிப்புகள் குறித்தும் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்ட இருக்கிறது.

இதுகுறித்து அமைச்சர் அருண்ராஜ் பேசியதாவது: 'ஜனநாயகத்தை போற்றிப் பாதுகாக்கவும், போதையில்லா தமிழகத்தை உருவாக்கவும், கடந்த தேர்தலில் தாராபுரம் தொகுதியில் வெற்றி வாய்ப்பை நாம் இழந்திருந்தாலும், இத்தொகுதி மக்களிடையே அரசியல் மற்றும் ஜனநாயக விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மாற்றத்துக்கான இந்த புரட்சியில் அவர்களையும் பங்கெடுக்கச் செய்யவும் இந்த சைக்கிள் பேரணி நடத்தப்பட்டது.

இந்த பேரணியானது வெறும் தேர்தலுக்கோ அல்லதுவெற்றிக்காகவோ



வில், தவெக அமைச்சர்கள் என்.ஆனந்த், அருண்ராஜ் மற்றும் பர்வேஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கொடியசைத்து சைக்கிள் பேரணியைத் தொடங்கி வைத்து சைக்கிள் ஓட்டினர்.

தாராபுரத்தில் தொடங்கியுள்ள இந்த விழிப்புணர்வு சைக்கிள் பேரணியானது பல்வேறு முக்கியப் பகுதிகள் வழியாகச் சென்று மதுராந்தகம் தொகுதியை அடைகிறது. வழிநெடுகிலும் பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யவும் பொது மக்களிடையே ஜனநாயக விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் தாராபுரத்தில் சைக்கிள் பேரணி நடைபெற்றது.

இந்தியாவின் மிகப் பெரிய பெருமையே அதன் ஜனநாயகம் தான். அந்த ஜனநாயகத்தின் மாண்பைப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய கடமை ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு. அல்ல; மக்களிடையே ஜனநாயகப் பண்புகளையும் விழிப்புணர்வையும் தொடர்ந்து ஏற்படுத்துவதே இந்த சைக்கிள் பேரணியின் முதன்மை நோக்கம். இவ்வாறு அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்தார். நிகழ்ச்சியில் ஏராளமான தவெக கட்சித் தொண்டர்கள், இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு சைக்கிள் ஓட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# "சின்னமனூரில் பாரம்பரியமிக்க பள்ளியின் நிர்வாக சீர்கேடு"

## ஆசிரியர்மாணவர் நலன் காக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க கோரிக்கை

தேனி மாவட்டம், சின்னமனூர் பகுதியில் பல தலைமுறைகளாக ஏழை, எளிய மாணவர்களின் கல்வி ஒளிவிளக்காகவும், ஆயிரக்கணக்கான சாதனையாளர்களை உருவாக்கி தந்த வரலாற்று சிறப்புமிக்க அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளியிலும், அதை நிர்வகிக்கும் அமைப்பிலும் கடந்த சில காலமாக நீடித்து வரும் நிர்வாக சீர்கேடுகள் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் அப்பள்ளியின் முன்னாள் மாணவர்களிடையே பெரும் வேதனையையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. இப்பள்ளியின் நீண்டகால நற்பெயருக்கும் பாரம்பரியத்திற்கும் எந்தவித களங்கமும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் மிக தீவிர அக்கறை கொண்டுள்ள முன்னாள் மாணவர்களும் சமூக ஆர்வலர்களும், பள்ளியின் நிர்வாக சீர்கேடுகளை களைந்து இயல்பு நிலையை திரும்ப கொண்டுவர அரசுத் துறை அதிகாரிகள் உடனடியாக களமிறங்க வேண்டும் என வலியுறுத்துகின்றனர். தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975 (TN Societies Registration Act, 1975)ன் கீழ் பதிவு செய்யப்பட்டு இயங்கி வரும் பள்ளி நிர்வாக குழுவின் பதவி காலம் முடிவடைந்து பல மாதங்கள் கடந்த நிலையிலும், சட்டப்பிரிவு 15 மற்றும் விதிகள் (Scheme Deed) உணர்த்தும் ஜனநாயக வழியிலான தேர்வுகள் நடத்தப்படவில்லை என பரவலாக குற்றம் சாட்டப்படுகிறது. தற்போதைய நிர்வாக அமைப்பின் சார்பில் சட்ட விதிகளுக்கு புறம்பாக புதிய உறுப்பினர்களை சேர்ப்பது மற்றும் தணிக்கை அறிக்கைகளை சமர்ப்பிக்காமல் தாமதிப்பது போன்ற பல்வேறு நிர்வாக சீர்கேடுகள் நடந்துள்ளதாக அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இக்குற்றச்சாட்டுகள் குறித்த உண்மைத்தன்மையை ஆராய்ந்து கவனிக்கும் பொருட்டு, துறை சார்ந்த அதிகாரிகள் நேரடியாக கள ஆய்வு மேற்கொள்வது தற்போதைய சூழலில் மிக அவசியமாகிறது.

இத்தகைய தொடர் குளறுபடிகளால், தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்குமுறை சட்டம் 1973 (TN Recognized Private Schools Regulation Act, 1973) மற்றும் அதன் 1974ஆம் ஆண்டையவிதிகளின்படி பள்ளியின் அன்றாட நிர்வாகத்தை செயல்படுத்துவதிலும், முடிவுகள் எடுப்பதிலும் முடக்க நிலை உருவாகியுள்ளது. மேலும், பள்ளி நிர்வாக வழக்குகளில் நீதிமன்ற வழிகாட்டுதலின்படி நியமிக்கப்படும் 3 நபர்கள் கொண்ட வழக்கறிஞர் ஆணையர் குழு அல்லது தற்காலிக கண்காணிப்பு குழுவின் பரிந்துரைகளையும், பள்ளியின் தாளாளர் (Correspondent) தரப்பு நடைமுறைகளையும் முறைப்படி பின்பற்றி ஜனநாயக வழியில் தகுதியான நிர்வாகம் அமைவதை உறுதி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்துள்ளது.

இந்த நிர்வாக மோதல்களினாலும் குளறுபடிகளினாலும், பள்ளியில் பல ஆண்டுகளாக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மாதாந்திர ஊதியம் வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டு, அவர்கள் கடும் பொருளாதார நெருக்கடிக்கும் மன உளைச்சலுக்கும் தள்ளப்பட்டுள்ளனர். ஆசிரியர்கள் மன அமைதியின்றி இருக்கும் சூழல், வகுப்பறைகளின் கற்பித்தல் தரத்தையும் மாணவர்களின் கவனத்தையும் நேரடியாக பாதிக்கும் என்பதால், நாட்டின் தூண்களான மாணவர்களின் எதிர்காலம் இதனால் வீணடிக்கப்படக் கூடாது என்பதில் முன்னாள் மாணவர்கள் மிகுந்த கவலை தெரிவிக்கின்றனர். இப்பிரச்சனைக்கு தீர்வுகாண மாவட்டப் பதிவாளர் (DR), முதன்மைக்கல்வி அலுவலர் (CEO) மற்றும் மாவட்டக்கல்வி அலுவலர் (DEO) ஆகியோர் தங்கள் சட்டப்பூர்வ அதிகாரங்களை பிரயோகிக்க வேண்டும் என சட்ட வல்லுநர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டப்பிரிவு 36 மற்றும் 37ன் கீழ் மாவட்டப் பதிவாளர் (Societies) உடனடியாக தலையிட்டு பிரத்யேக விசாரணை மற்றும் கள ஆய்வு நடத்த உத்தரவிட வேண்டும். அவ்வாறு ஆய்வு நடத்தும்போது, மேலோட்டமாக இல்லாமல், கூறப்படும் நிர்வாக சீர்கேடுகள் மற்றும் முறைகேடுகள் உண்மையில் நடந்துள்ளதா இல்லையா என்பதை தீர விசாரித்து, அதன் முடிவுகளை பொதுமக்கள் அறியும் வண்ணம் பகிரங்கமாக தெரியப்படுத்த வேண்டும். அதேபோல, பள்ளி நிர்வாகத்தில் முடக்கம் ஏற்படும்போது, தமிழ்நாடு தனியார் பள்ளிகள் ஒழுங்குமுறை சட்டப்பிரிவு 18 மற்றும் விதி 2(c)ன் கீழ் முதன்மைக்கல்வி அலுவலர் (CEO) மற்றும் மாவட்டக்கல்வி அலுவலர் (DEO) உடனடி நடவடிக்கை எடுத்து, ஆசிரியர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க 'நேரடி பட்டுவாடா' (Direct Payment system) முறையை செயல்படுத்த அதிகாரம் உள்ளது. மேலும், நிர்வாக சிக்கல் சீராகும் வரை சட்டப்பிரிவு 53A மற்றும் 18Aன் கீழ் பள்ளியை வழிநடத்த தற்காலிக சிறப்பு அதிகாரியை (Special Officer) நியமித்து மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாமல் தடுப்பதற்கும் சட்டத்தில் வழியுள்ளது.

சட்டப்பூர்வமான கள ஆய்வுக்குப் பின், முறையான தேர்தல் அறிவிக்கப்பட்டு இனி வரும் காலங்களில் ஜனநாயக முறையில்புதியநிர்வாகம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டால், அதுகுறித்த அதிகாரப்பூர்வ தகவல்களை நாளிதழ்கள் மற்றும் ஊடகங்களின் வாயிலாக பொதுமக்களுக்கு முறைப்படி தெளிவுபடுத்த வேண்டும். யாரையும் புண்படுத்தும் நோக்கம் இன்றி, கல்வி சேவையையும் மாணவர் ஆசிரியர் நலனையும் முதன்மையாக கொண்டு, பள்ளியின் பாரம்பரிய பெருமையை பாதுகாக்கும் பொருட்டு, கல்வித்துறையும் மாவட்டப் பதிவாளர் அலுவலகமும் இணைந்து நேர்மையான கள ஆய்வும் கூட்டு நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என்பதே அப்பகுதி பொதுமக்களின் ஒரே எதிர்பார்ப்பாகும்.

# சட்டம் ஒழுங்கு தகவல்களை ஆர்டிஐ மூலம் பெற விலக்கு அளித்த அரசாணை உடனடி வாபஸ்

## எதிர்க்கட்சிகள் எதிர்ப்பால் அரசு நடவடிக்கை

தமிழக அரசின் சட்டம் ஒழுங்கு துறை தகவல்களை ஆர்டிஐ மூலம் பெறுவதற்கு விலக்கு அளித்து பிறப்பிக்கப்பட்ட அரசாணையை, பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்ததை தொடர்ந்து தமிழக அரசு வாபஸ் பெற்றது.

அரசின் பல்வேறு துறைகளின் செயல்பாடுகள் குறித்து பொதுமக்கள் தகவல் அறியும் உரிமை சட்டம் (ஆர்டிஐ) மூலம் தகவல்களை பெற்று வரும் சூழலில், சட்டம் ஒழுங்கு துறைக்கு இதிலிருந்து விலக்கு அளித்து தமிழக அரசு அரசாணையை வெளியிட்டது. மனிதவள மேலாண்மைத் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி வெளியிட்ட அந்த அரசாணையில், "சாதி மற்றும் மத மோதல்கள், விசாரணை கமிஷன்கள் அமைத்தல், துப்பாக்கிச் சூடு சம்பவங்கள், ரகசிய புலனாய்வு விவரங்கள், குண்டர்சட்டம் உள்ளிட்ட தடுப்புக் காவல் நடவடிக்கைகள் போன்ற அதீத பாதுகாப்பு சார்ந்த விவகாரங்களைஇத்துறையால் கையாளப்படுகிறது.

இதனை பாதுகாக்கும் நோக்கில் சட்டப்பிரிவு 24(4)ன்கீழ் ஆளுநரின் ஒப்புதலுடன், ஆர்டிஐயில் இருந்து சட்டம் ஒழுங்கு துறை தொடர்பான தகவல்களை பெறுவதில் கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. உளவு மற்றும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடும் அமைப்பாக அறிவித்து இந்த விலக்கு அளிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.




இந்த அரசாணைக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கைகளில் கூறியிருப்பதாவது: தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர்: வெளிப் படையான நிர்வாகத்தை உறுதி செய்யும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் விலக்கு பட்டியலில் பொது (சட்டம் மற்றும்ஒழுங்கு)துறையையும் சேர்த்து விரிவுபடுத்தியிருப்பது கவலைக்குரியது. இத்தகைய விலக்கு, வெளிப் படைத்தன்மையையும் நல்லாட்சியையும் முன்னிறுத்தும் அரசுக்கு உகந்ததாக அமையாது. பாமக தலைவர் அன்புமணி: ஒரு மாநிலத்தின் அமைதிக்கும், பாதுகாப்புக்கும்சட்டம் ஒழுங்கு மிகவும் முக்கியமானது. அது குறித்த தகவல்களை பெறும் அடிப்படை உரிமையை மக்களிடமிருந்துதமிழகஅரசு பறித்திருப்பது கண்டிக்கத்தக்கது. இந்த அரசாணையைதமிழகஅரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம்: தமிழக அரசின் இந்த செயல் ஜனநாயகத்துக்கும், வெளிப்படை தன்மைக்கும் எதிரானது. இது அரசியல் சாசனம் உறுதி செய்துள்ள போராட்ட உரிமைகளை நசுக்கும் முயற்சியாகும்.

இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன்:

தகவல் அறியும் உரிமை சட்டத்தின்வரம்பிலிருந்து சட்டம் ஒழுங்கு துறைக்கு விலக்கு அளித்துள்ளது கண்டனத்துக்குரியது. இதே போல் அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன், ஐஜேகே தலைவர் ரவிபச்சமுத்து உள்ளிட்டோரும் கண்டனம் தெரிவித்திருந்தனர். பல்வேறு தரப்பிலிருந்தும் எதிர்ப்புகள் தீவிர மடைந்ததை தொடர்ந்து, தமிழக அரசு தனது முடிவை மறு பரிசீலனை செய்து அரசாணையைத் திரும்ப பெறுவதாக அறிவித்தது. இதுகுறித்து அமைச்சர் சிடிஆர் நிர்மல்குமார் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "தகவல் அறியும் உரிமைச் சட்டப் பிரிவு 24(4)ன் கீழ் பொது (சட்டம் ஒழுங்கு) துறைக்கு விலக்கு அளித்து வெளியிடப்பட்ட தமிழக அரசின் அரசாணை விலக்கி கொள்ளப்பட்டுள்ளது" என தெரிவித்தார். அரசின் இந்த நடவடிக்கைக்கு வரவேற்பு தெரிவித்துள்ள காங்கிரஸ் எம்.பி. பிரவீன்சக்கரவர்த்தி, "பிற கட்சிகளின் ஆக்கப்பூர்வமான கருத்துகளுக்குச் செவிசாய்த்து, தேவைப்படும்போது முடிவுகளைச் சரிசெய்து கொள்ளும் துணிச்சலை அரசு வெளிப்படுத்தியுள்ளது" என குறிப்பிட்டு உள்ளார்.

# "கரூர் அருகே அகண்ட காவிரியின் பௌர்ணமி மகா ஆரத்தி" திரளான பொதுமக்கள் பங்கேற்பு

கரூர் மாவட்டம் குளித்தலையில் காவிரி நதி நீர் பாதுகாப்பு அறக்கட்டளை சார்பில், பௌர்ணமிதினத்தைமுன்னிட்டு அகண்ட காவிரி நதிக்கு சிறப்பு வழிபாடும் மகா ஆரத்தி விழாவும் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இயற்கை வளத்தையும், மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் நீர்நிலைகளையும்போற்றி பாதுகாக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில், காவிரி நதிக்கு வண்ண மலர்கள் தூவி, தீபங்கள் ஏற்றி மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

தொடர்ந்து, நதியை வழிபாட்டு மரியாதையுடன் போற்றி சிறப்பு பிரார்த்தனைகளும் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்ச்சியில் வாழைக்காய் வியாபாரி சேட், ராமகிருஷ்ணன், கருணாநிதி, மதுரா செல்வம், மதியழகன், வெங்கடேஷ், பூசாரி ரவி உள்ளிட்ட அமைப்பின் முக்கிய உறுப்பினர்களும், அப்பகுதியை சேர்ந்த திரளான பொதுமக்களும் கலந்துகொண்டு காவிரி அன்னையை வழிபட்டு இறையருள் பெற்றனர்.

விழாவின் நிறைவாக வருகை தந்திருந்த பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் நிறைவான அன்னதானம் வழங்கப்பட்டது. நீர் நிலைகளின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையிலும், பாரம்பரிய வழிபாட்டை வலியுறுத்தும் வகையிலும் அமைந்த இந்நிகழ்வு குளித்தலை பகுதியில் பெரும் நெகிழ்ச்சியையும் வரவேற்பையும் பெற்றுள்ளது.







# மதுராந்தகம் இடைத்தேர்தல் மாதவரம் தெற்கு பகுதி திமுக நிர்வாகிகள் தீவிர வாக்கு சேகரிப்பு

செங்குன்றம், செப்டம்பர் 28:

மதுராந்தகம் இடைத்தேர்தல் அச்சிறுபாக்கம் ஒன்றியம் கீழாமூர் ஊராட்சியில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் மாதவரம் சட்ட மன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் ஆலோசனைபடி மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் ஜி.துக்காராம் தலைமையில் மண்டலக் குழு தலைவர் எஸ்.நந்தகோபால் முன்னிலையில் மாதவரம் தெற்கு பகுதி துணை செயலாளர் இ.மோகன், முன்னாள் கவுன்சிலர் எல்.ஜி. செல்வம், 26வது வட்ட பிரதிநிதி முத்து, 33வது வட்ட துணை செயலாளர் முத்தமிழ் செல்வன் மற்றும் நிர்வாகிகள் தசரதன், ஏகுராஜ், பிரவீன் உள்ளிட்டோர்கள் வீடுவீடாக சென்று வாக்காளர்களை சந்தித்து திமுக ஆட்சியில் செய்த சாதனைகளை விளக்கி கூறி திமுக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டி தீவிர வாக்கு சேகரித்தனர்.

# குரூப்1 தேர்வு மையங்களில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அதிரடி ஆய்வு

திருவண்ணாமலை செப்.28

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சார்பில் நடைபெற்ற ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு–I முதல்நிலைத் தேர்வு மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் இன்று (27.09.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



திருவண்ணாமலை கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த தேர்வுமையத்தில்ஆய்வு செய்த ஆட்சியர், தேர்வு நடைமுறைகள் முறையாக நடைபெறுகிறதா, தேர்வர்களுக்கான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளனவா என்பது குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி, அருணை பொறியியல் கல்லூரி, கம்பன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்), சண்முகா தொழிற்சாலை கலை மற்றும் அறிவியல் கல்லூரி, எஸ்கேபி பொறியியல் கல்லூரி என மொத்தம் 5 மையங்களில் குரூப்1 முதல்நிலைத் தேர்வு நடைபெற்றது. தேர்வு மையங்களைக் கண்காணிக்க 15 தலைமை கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். தேர்வு நடைமுறைகள் முழுவதும் கண்காணிக்கப்பட்டு வீடியோ பதிவு செய்ய 15 ஒளிப்பதிவாளர்களும், துணை ஆட்சியர் நிலையில் 2 பறக்கும் படையினரும், 3 நடமாடும் பறக்கும் படையினரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இன்றைய தேர்வில் மொத்தம் 4,561 தேர்வர்கள் எழுதுவதற்கு தகுதி பெற்றிருந்த நிலையில், 3,594 பேர் தேர்வில் பங்கேற்றனர். 967 பேர் தேர்வுக்கு வரவில்லை.

இதனைத் தொடர்ந்து, பௌர்ணமி நிறைவடைந்ததையொட்டி திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் நடைபெற்று வரும் தூய்மைப் பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தூய்மைப் பணியாளர்கள் மூலம் குப்பைகள் சேகரிக்கப்பட்டு அகற்றப்படும் பணிகள் குறித்தும் அவர் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், திருவண்ணாமலை வட்டாட்சியர் மோகனராமன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ஆற்காட்டில் 300க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கிய காமராஜர் அறக்கட்டளை

ஆற்காடு, செப். 28

ஆற்காடு காமராஜர் அறக்கட்டளை சார்பில் ஏழை மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் விழா ஆற்காடு நகராட்சி அருகிலுள்ள காமராஜர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.



விழாவிற்கு காமராஜர் அறக்கட்டளை தலைவர் திரு. தங்கபாண்டியன் தலைமை தாங்கினார். அறக்கட்டளை செயலாளர் திரு. பொன் கு. சரவணன் முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக விஐடி பல்கலைக்கழக துணைத் தலைவர் டாக்டர் ஜி.வி. செல்வம் கலந்து கொண்டு விழாவில் பேருரையாற்றினார்.தொடர்ந்து மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகைகளை வழங்கி அவர்களை பாராட்டினார்.

நிகழ்வில் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எம். சுகுமார் கலந்து கொண்டு மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து சிறப்புரையாற்றினார். கல்வியே மாணவர்களின் எதிர்கால முன்னேற்றத்திற்கு அடித்தளம் என அவர் வலியுறுத்தினார்.

மேலும் உதவும் உள்ளங்கள் அமைப்பின் திரு. இரா. சந்திரசேகர், அகத்தியர் சேவா அறக்கட்டளையின் திருமதி ஜெயலலிதா கணேஷ், ஆற்காடு நகர கழக செயலாளர் திரு. ஜிம் எம். சங்கர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் திரு. பி. பிச்சாண்டி, திரு. சர்தார் பாஷா, திரு. என். சுந்தர், கவுன்சிலர்கள் பூவரசன், உதயகுமார், சி. கண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. பெற்றோர்கள், ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பித்தனர். கல்வி வளர்ச்சிக்காக தொடர்ந்து பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அறக்கட்டளை நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# தேசிய நெடுஞ்சாலை செங்குன்றம் சர்வீஸ் சாலையில் மணல் மேடுகள்: விபத்து ஏற்படுமுன் மணல் அப்புறப்படுத்தப்படுமா?

செங்குன்றம், செப்டம்பர் 28:

சென்னை கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலை மாதவரம் ரவுண்டானா முதல் தொடங்கி செங்குன்றம் வழியாக செல்கின்றது. செங்குன்றம் வடகரை சிக்னல் முதல் சோழவரம் சுங்கச்சாவடி வரை இரு புறங்களில் அமைந்துள்ள சர்வீஸ் சாலையில் மணல் குவிந்து மணல் மேடு போல் காட்சியளிக்கின்றது.





இதனால் இரு சக்கர வாகனங்களில் செல்வோர் வண்டி ஓட்டிச் செல்லும் போது மணலில் சறுக்கி விழுந்து விபத்து ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படும் அபாயம் அதிகமாக இருப்பதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

உயிர்ப்பலி ஏற்படுமுன் சர்வீஸ் சாலையில் குவிந்து கிடக்கும் மணலை அகற்றி பொதுமக்களின் உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்று பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி பகுதியில் நகராட்சியால் வழங்கப்படும் குடிநீர் பச்சையாகவும் மஞ்சளாகவும் கலந்த கலரில் பாசனம் போல் வருகிறது இதனால் டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்படும் என பொதுமக்கள் மிகவும் அச்சத்துடன் குடிநீரை தங்கள் வீட்டிற்கு பிடித்து செல்கின்றன இதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்



இந்தியா உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகள் மற்றும் வழிகாட்டுதலின்படி உருவாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 இன் படி பொதுமக்கள் மற்றும் வணிகர்கள் தங்கள் வீடுகளில் வணிக நிறுவனங்களில் உருவாகும் திடக்கழிவுகளே நான்கு வகையாக பிரித்து தூய்மை பணியாளரிடம் வழங்க வேண்டும் என இதன் மூலம் நகரில் சுற்றுச்சூழலையும் பொது சுகாதாரத்தையும் பாதுகாக்க முடியும் என பழனி நகராட்சி பகுதியில் பொது சுகாதார மேம்படுத்த ஒத்துழைப்புதரவேண்டும்எனபழனிநகராட்சிநிர்வாகம் தகவல்

### சென்னை பெங்களூர் தேசிய நெடு ஞ்சாலையில் பழுதாகி நிறுத்தப்பட்டிருந்த

# டாட்டா ஏசி லோடு வாகனம் மீது லாரி மோதியதில் டாட்டா ஏசி வாகனம் தலை குப்புற கவிழ்ந்தது

## இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அடுத்த வேப்பூர் அருகே

இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அடுத்த வேப்பூர் அருகே சென்னை பெங்களூர் தேசிய நெடு ஞ்சாலையில் பழுதாகி நிறுத்தப்பட்டிருந்த டாட்டா ஏசி லோடு வாகனம் மீது லாரி மோதியதில் டாட்டா ஏசி வாகனம் தலை குப்புற கவிழ்ந்தது. தொடர்ந்து லாரியின் பின்னால் வந்த டாடா ரக கார் லாரியின் பின்புறத்தில் மோதி விபத்துக்குள்ளானது.






வேலூர் மாவட்டம் செதுவாலையில்இருந்து சென்னைசென்றுகொண்டிருந்த லாரி வேப்பூர் அருகே வந்த போது, நெடு ஞ்சாலையில் பழுதாகி எவ்வித முன்னெச் 'சரிக்கை அறிவிப்பும் இன்றி நிறுத்தப்பட்டிருந்த டாட்டா ஏசி லோடு வாகனம் மீது மோதியது. இதில் டாட்டா ஏசி வாகனம் சாலையில் தலை குப்புற கவிழ்ந்தது. இதனைத் தொடர்ந்து, லாரியின் பின்னால் வந்த கார், லாரியின் பின்புறத்தில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் லாரி ஓட்டுநர் ராஜ்குமாரின் கால் ஸ்டியரிங் பகுதியில் சிக்கிக் கொண்டது.தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த ஆற்காடு நகர போலீசார், பொதுமக்கள் உதவியுடன் ஜேசிபி இயந்திரத்தின் மூலம் ராஜ்குமாரை மீட்டு சிகிச்சைக்காக ஆற்காடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்தில் டாட்டா ஏசி, லாரி மற்றும் கார் ஓட்டுநர்கள் எவ்வித உயிர்ச்சேதமும் இன்றி உயிர் தப்பினர். விபத்து காரணமாக சென்னை பெங்களூரு தேசிய நெடு ஞ்சாலையில் ஒரு மணிநேரத்திற்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பின்னர் ஜேசிபி இயந்திரம் மூலம் விபத்தில் சிக்கிய வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து போக்குவரத்து சீரானது. இதுகுறித்து ஆற்காடு நகர போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.




திண்டுக்கல் மாவட்டம் பழனி சண்முக நதியில் we the leader அமைப்பு சார்பில்இருபதுக்குமேற்பட்டஜேசிபிமற்றும்ஹிட்டாச்சிஇயந்திரங்களைக் கொண்டு தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்கள் பக்தர்கள் 100 க்கு மேற்பட்டோர் பழனி புனித நதியான சண்முக நதியே சுத்தம் செய்யும் வேலைகளில் நடைபெற்றது இப்பணி விரைவில் இந்த சண்முக நதியே சுத்தம்செய்துநல்லபடியாகபக்தர்கள்பயன்பாட்டுக்குகொண்டுவரப்படும் என அமைப்பினை தெரிவித்துள்ளனர்






திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே ஆயக்குடி நடைபெற்ற தமிழக வெற்றி கழகம் கட்சியின் பொதுக்கூட்டத்தில் அக்கட்சியின் மாவட்ட தலைவர் தலைமையில் பல்வேறு மாற்றுக்கட்சியில்இருந்துவிலகிதங்களைதமிழக வெற்றி கழகத்தில் நூற்றுக்கு மேற்பட்டோர் தங்களை தமிழக வெற்றி கழகத்தில் இணைத்துக் கொண்டனர் இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் சார்பு அணியினர் மற்றும் தமிழக வெற்றி கழகத்தின் தொண்டர்கள் திரளான கலந்து கொண்டனர்

# ஆற்காட்டில் மாநில அளவிலான கரலாக்கட்டை ஓபன் சாம்பியன்ஷிப் போட்டி

## பத்மஸ்ரீ விருது பெற்ற சாசன் ரகு பங்கேற்பு - எஸ்.எம்.சுகுமார் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்

ராணிப்பேட்டை, செப்.28

ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு தனியார் பள்ளி வளாகத்தில் தமிழ்நாடு கரலாக் கட்டை விளையாட்டு சங்கம் சார்பில் மாநில அளவிலான கரலாக் கட்டை ஓபன் சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்று வருகிறது.

விழாவில் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த பத்மஸ்ரீ விருது பெற்ற சாசன் ரகு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். மேலும், அகில உலக கரலாக்கட்டை விளையாட்டு சங்க கூட்டமைப்பின் நிறுவன தலைவர் ஜோதி செந்தில் கண்ணன் கலந்து கொண்டார். சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றனர். கரலாக் கட்டையை சுழற்றுதல், உடல் கட்டுப்பாடு, வேகம், ஒருங்கிணைப்பு உள்ளிட்ட பல்வேறு திறன்களை வெளிப்படுத்தும் வகையில் போட்டிகள் நடைபெற்றன.

போட்டியில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்




தமிழர்களின் பாரம்பரிய தற்காப்பு மற்றும் உடற்பயிற்சி விளையாட்டுகளில் ஒன்றான கரலாக் கட்டை விளையாட்டை இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் ஊக்குவிக்கும் வகையிலும், மாநில அளவில் சிறந்த வீரர்களை அடையாளம் காணும் நோக்கிலும் இந்த போட்டி நடத்தப்படுகிறது.

போட்டியின் தொடக்க ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சுகுமார் கலந்து கொண்டு மாநில அளவிலான கரலாக்கட்டை ஓபன்சாம்பியன்ஷிப் போட்டியை தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களில் இருந்து கலந்து கொண்ட வீரர், வீராங்கனைகள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி போட்டிகளில் பட்டது.பாரம்பரியமான கரலாக்கட்டை விளையாட்டை அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு செல்லவும், இளைஞர்களிடையே உடல் ஆரோக்கியம் மற்றும் தற்காப்பு திறனை வளர்க்கவும்இதுபோன்ற மாநில அளவிலான போட்டிகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்று விழாவில் வலியுறுத்தப்பட்டது.



தமிழ்நாடு முதலமைச்சர்ஜோசப்விஜய்இன்றுதாய்மாமன்தங்கமோதிரம் திட்டத்தை தொடங்கி வைக்கிறார். திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அரசு மருத்துவமனையில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் நிகழ்ச்சி தொடர்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகளை நேரில் ஆய்வு மேற்கொண்டார். துணை இயக்குநர் (குடும்பநலம்) சுரேஷ், முதன்மை மருத்துவ அலுவலர் சந்திரகுமார் மற்றும் மருத்துவர்கள் மற்றும் மருத்துவதுறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ரூ.6 இலட்சம் மதிப்பிலான 50 செல்போன்களை மீட்டு உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி

இராணிப்பேட்டை மாவட்டத்தில் காணாமல் போனதாக பெறப்பட்ட செல்போன் புகார்களின் அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கையின் மூலம் சுமார் ரூ.6 இலட்சம் மதிப்பிலான 50 செல்போன்கள் மீட்கப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களிடம் (26.09.2026)சனிக்கிழமை ஒப்படைக்கப்பட்டது.கடந்த நான்கு மாதங்களில் இதுவரை சுமார் ரூ.44 இலட்சம் மதிப்பிலான 340 காணாமல் போன செல்போன்கள் மீட்கப்பட்டு, உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.




மேலும், பொதுமக்கள் தங்களின் செல்போன் காணாமல் போனால், உடனடியாக அருகிலுள்ள காவல் நிலையத்தில் CSR பதிவு செய்து, CEIR (Central Equipment Identity Register) Portalல் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது.



திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள இராம கிருஷ்ணா மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள தேர்வு மையத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு 1 (தொகுதி I பணிகள்) முதல்நிலை தேர்வு நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன்,இ.ஆ.ப., நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.



# கன்னியாகுமரி மாவட்டம் கேசவன்புத்தன் துறையில், கடல் அலை இழுத்துச் சென்ற நான்கு வயது குழந்தை மாயம்.

கன்னியாகுமரி மாவட்டம் கேசவன்புத்தன்துறையில், கடல் அலை இழுத்துச் சென்ற நான்கு வயது குழந்தை மாயமானது.

குடும்பத்துடன் கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த நிலையில் சகோதரர்கள் இருவரை கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டது. அங்கிருந்தவர்கள் ஒரு குழந்தையை மீட்டனர், மற்றோரு குழந்தைஅலையில்இழுத்துச் சென்றதாக கூறப்படுகிறது,தற்போது தீயணைப்பு வீரர்கள் மற்றும் அப்பகுதி மீனவர்கள் மாயமான குழந்தையை தேடும் பணியில்ஈடுபட்டுள்ளனர். இன்று கடல் அலை அதிகமாக இருந்தது.

## மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில்

# மதுராந்தகம் கிளியா நகரில் நூதனமுறையில் சூட்கேசுடன் வாக்காளர்களிடம் தீவிர வாக்கு சேகரிப்பு

செங்குன்றம், செப்டம்பர் 28:

திமுக கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் ஆணைக்கிணங்க, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின்படியும்மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையில் அச்சிறுபாக்கம் ஒன்றியம் கிளியா நகர் பாக எண் 143க்குட்பட்ட பகுதிகளில்சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாத







வரம் எஸ். சுதர்சனம் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மதுராந்தக திமுக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனை உதயசூரியன் சின்னத்தில் ஆதரித்து 100 நாள் பணியாளர்களிடம் வாக்குச் சேகரித்தனர்.

இதில் மாதவரம் வடக்கு பகுதி வட்டச் செயலாளர்கள் சந்துரு, தாமரைச் செல்வன், கருணாகரன், குப்பன், கண்ணப்பன், அங்குசாமி, மஞ்சம்பாக்கம் பாபு, எஸ். உதயகுமார் மற்றும் கிளியா நகர் நிர்வாகிகள் சேகர், தேவ், செல்வராஜ், கபாலி, அகஸ்டின், வேலாயுதம், காளியப்பன், இளங்கோ,நடராஜன் உள்ளிட்ட நிர்வாகிகள் நூதன முறையில் சூட்கேசுடன் வாக்காளர்களை சந்தித்து தீவிர வாக்கு சேகரித்தனர்.

# பூந்தமல்லி சென்னீர்குப்பத்தில் 8 கிலோ கஞ்சா பறிமுதல் : இருவர் கைது

செங்குன்றம், செப்டம்பர் 28:

தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாகவும், ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார் உத்தரவின்படியும், காவல் இணை ஆணையாளர் மருத்துவர் ஆர்.சிவகுமார் மேற்பார்வையிலும், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு உதவி ஆணையாளர் களியசுந்தரம் வழிகாட்டுதலின்படியும், பூந்தமல்லி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளர் பிரபு தலைமையிலான போலீசார் ரகசிய தகவலின் பேரில் சென்னீர்குப்பம், ஆவடி சாலையில் உள்ள ராயல் ஒயின்ஷாப் அருகே கண்காணிப்பில் ஈடுபட்டனர். அப்போது, அப்பகுதியில் சந்




தேகத்திற்கிடமாக சுற்றித்திரிந்த காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சிவா (வ/25) மற்றும் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் பகுதியைச் சேர்ந்த மாயாண்டி கண்ணன் (வ/21) ஆகிய இருவரையும் பிடித்து விசாரணை மேற்கொண்டு, அவர்களிடம் சோதனை செய்ததில், இருவரிடமும் தலா 4 கிலோ வீதம் மொத்தம் 8 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது. இதையடுத்து, இருவரையும் கைது செய்து, பூந்தமல்லி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் வழக்குப் பதிவு செய்து, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## மோடியின் 76வது பிறந்தநாள் விழா:

# கிரிவலப்பாதையில் 500க்கும் மேற்பட்டோருக்கு இலவச மருத்துவ பரிசோதனை

திருவண்ணாமலை: செப்.28

பாரத பிரதமர் நரேந்திர மோடியின் 76வது பிறந்த நாளையொட்டி, திருவண்ணாமலைதெற்குமாவட்ட பாஜக சார்பில் பல்வேறு தொடர் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, கிரிவலப் பாதை குபேரலிங்கம் அருகே உள்ள தீபமலை தெய்வீக மருத்துவத்தில் சிறப்பு இலவச மருத்துவ முகாம் முகாமில் டாக்டர்கள் எஸ். திவ்யா, எஸ். மதுமிதா, அருண்குமார் உள்ளிட்ட மருத்துவர்கள் மற்றும் மருத்துவக் குழுவினர் பங்கேற்று பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டனர். குறிப்பாக சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், மூட்டு வலி உள்ளிட்ட பல்வேறு உடல்நலப்பிரச்சினைகளுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பெற்று பயனடைந்தனர். பிரதமர் பிறந்தநாள் கொண்டாட்டத்தை மக்கள் நலப் பணியுடன் இணைக்கும் வகையில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாம், பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் மத்தியில் வரவேற்பை பெற்றது.

நிகழ்ச்சியில் மாவட்ட பொதுச் செயலாளர்கள் ஜெய்நாத், கவிதா, பிரதிஷ், முன்னாள் மாவட்ட பொதுச் செயலாளர் முரு



நடைபெற்றது.

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட பாஜக மருத்துவ பிரிவு தலைவர் டாக்டர் ராஜா ஹரிகோவிந்தன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த முகாமை, மாவட்ட தலைவர் கே. ரமேஷ் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

பரிசோதனையின் அடிப்படையில் பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் மற்றும் தேவையான சிகிச்சைகள் வழங்கப்பட்டதுடன், இலவசமாக மருந்துகளும் வழங்கப்பட்டன.

கிரிவலப் பாதையில் நடைபெற்ற இந்த முகாமில் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு மருத்துவப் பரிசோதனைமற்றும்சிகிச்சை கன், ஊடகப்பிரிவு மாவட்டத் தலைவர் என்.எஸ். பூபதி, கிழக்கு ஒன்றியத் தலைவர் ஆர். தங்கராஜ், ஒன்றிய துணைத் தலைவர் வேடி ராஜ், ஒன்றிய பொதுச் செயலாளர் கார்த்தி, அலுவலகப் பொறுப்பாளர் முத்து உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், மருத்துவ அணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

## வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில்

# துராந்தகம் கிளியா நகர் ஓட்டைக்கோவிலில் வாக்காளர்களிடம் தீவிர வாக்கு சேகரிப்பு

செங்குன்றம், செப்டம்பர் 28:

திமுக கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் ஆணைக்கிணங்க, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின்படியும் மதுராந்தகம் இடைத்தேர்தல் அச்சிறுபாக்கம் ஒன்றியம் கிளியா நகர், ஓட்டைக்கோவில் பகுதியில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் தலைமையில் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் மோரை கோ.தயாளன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் திமுக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனைஉதயசூரியன் சின்னத்தில் ஆதரித்து வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தனர்.



இதில் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் வெ. ஸ்டீபன் (எ) ஹரி கிருஷ்ணன், அச்சரப்பாக்கம் ஒன்றியம் கிளியா நகர் ஊராட்சி கிளை கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில்

# மதுராந்தகம் செம்பூண்டி ஊராட்சி பாக எண்.141இல் தீவிர வாக்கு சேகரிப்பு

செங்குன்றம், செப்டம்பர் 28:

திமுக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்ஆணைக்கிணங்க, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி முன்னிட்டு அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம் செம்பூண்டி கிராமம் பாக எண்.141இல் திமுக வேட்பாளர் வழக்கறிஞர் பூண்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் எம். பழனி, பாக முகவர் ஜி.குமரவேல், சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக



ஸ்டாலின் அறிவுறுத்தலின்படியும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் ஆலோசனைபடி சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் மதுராந்தகம் இடைத்தேர்தலை இ.பரந்தாமனை உதயசூரியன் சின்னத்தில் ஆதரித்து சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளரும் சோழவரம் ஒன்றிய குழு முன்னாள் துணைப் பெருந்தலைவருமான மீ.வே. கர்ணாகரன் தலைமையில் செம் நிர்வாகிகள் உள்ளிட்டோர் வாக்காளர் பட்டியலை சரிபார்த்து, வீடு வீடாகச் சென்றும் 100 நாள் வேலை செய்யும் பணியாளர்களை நேரிடையாகச் சந்தித்தும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

# அறப்போர் இயக்கம் புகார் எதிரொலி: எ.வ.வேலு, அவரது மகன் மீது லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப்பதிவு

கடந்த ஆகஸ்ட் 13 ஆம் தேதி அறப்போர் இயக்கம் வெளியிட்ட அதன் சமூக வலைதள பதிவில், "திருவண்ணாமலை மாவட்டம் மலப்பம்பாடி ஏரியில் ரூ 8 கோடி அளவில் மண் திருட்டில் ஈடுபட்டு ஊழல் செய்து தன் குடும்ப நிலத்தில் அந்த மண்ணை கொட்டி நிலத்தை சமப்படுத்தி தி.மு.க இளைஞர் அணி மாநாடு நடத்திய முன்னாள் அமைச்சர் எ.வ வேலு, அவர் மகன் குமரன் மற்றும் அதிகாரிகள் மீது லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்கத்தில் (DVAC) அறப்போர் புகார் அளித்துள்ளது. உடனடியாக எஃப்.ஐ.ஆர் பதிவு செய்து நேர்மையான விசாரணை நடத்த கோரி புகார் மற்றும் ஆதார ஆவணங்கள் இன்றைய தினம் அனுப்பி உள்ளோம்.

தி.மு.க மாநாட்டிற்காக அரசு ஏரியில் சட்டவிரோத மண் திருட்டு

2025 டிசம்பர் 14 அன்று திருவண்ணாமலை மாவட்டம் மலப்பம்பாடி கிராமத்தில் உள்ள "கலைஞர் திடல்" நிலத்தில் தி.மு.க வடமண்டல இளைஞர்அணி மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டை ஒருங்கிணைத்தவர் தி.மு.க வடக்கு மண்டல பொறுப்பாளரான முன்னாள் அமைச்சர் எ வ வேலு. இந்த மாநாடு நடந்த 124 ஏக்கர் பரப்பளவு உள்ள கலைஞர் திடல் முன்னாள் அமைச்சர் வேலு மகன் எவ குமரனின் அருணைப்ராடக்ட்ஸ் அண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு சொந்தமானது.

இம்மாநாட்டிற்கான நிலத்தைச் சமன்படுத்துவதற்காக, அருகில் உள்ள மலப்பம்பாடி ஏரியிலிருந்து (சர்வே எண்:58) சுமார் 12 ஏக்கர் பரப்பளவில், 10 முதல் 23 அடி (3 முதல் 7 மீட்டர்) ஆழத்திற்கு மண்ணை சட்டவிரோதமாகத் தோண்டி எடுத்துள்ளார் முன்னாள் அமைச்சர் எவ வேலு மற்றும் அவர் மகன். இது நவம்பர் மற்றும் டிசம்பர் 2025 காலகட்டத்தில் நடந்துள்ளது.

தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள் 1959 (Rule 12(2))ன் படி, பொதுப் பயன்பாட்டிற்காக ஏரிகளில் மண் எடுக்க 1 மீட்டருக்கு மேல் அனுமதி அளிக்க சட்டத்தில் இடமில்லை.

ஆனால், இங்கு முன்னாள் அமைச்சரின் செல்வாக்கைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக 3 முதல் 7 மீட்டர் ஆழம் வரை லாரிகளில் மண் அள்ளப்பட்டு, அப்போதைய அமைச்சரின் மகனின் நிலம் சமன்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் அரசுக்கு எட்டு கோடி ரூபாய்க்கு மேல் இழப்பும், விவசாயத்திற்கு பாதிப்பும் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. அறப்போர் இயக்கம் இந்த ஏரியை நேரடியாக ஆய்வு செய்து ஏற்பட்டுள்ள இழப்பை ஆவணம் செய்துள்ளது.

கிட்டத்தட்ட 45 லட்சம் கனஅடி மண் திருடப்பட்டு கிட்டத்தட்ட ரூபாய் எட்டு கோடிக்கு மேல் அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது தெரியவந்துள்ளது

ஏரி கரையை ஆக்கிரமித்து சட்டவிரோதச் சாலை

மாநாட்டிற்கு வரும் கூட்டத்திற்கு ஏதுவாக, மலப்பம்பாடி ஏரியின் கரை மீது அணுகுசாலை அகலமாக பெரியளவில் அமைக்கப் பட்டுள்ளது.



முன்னாள் அமைச்சர் வேலுவின் குடும்பத்திற்கு சொந்தமான நிலத்தின் வாயில் வரை நெடுஞ்சாலைத் துறை மூலம் சட்டவிரோதமாக அணுகுசாலை அமைக்கப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு பாசனக் குளங்கள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் சட்டம், 2007க்கு முற்றிலும் எதிரான குற்றச் செயலாகும்.

பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் புகார் அளித்தும் பயனில்லை. இயற்கைவளங்கள் கொள்ளையடிக்கப்படுவதைக் கண்டு அதிகாரிகளிடம் உழவர் உரிமை இயக்கம் நவம்பர் 25 2005 இல் புகார் அளித்தது.

ஆனால் ஆட்சியர், தாசில்தார், மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் காவல்துறை அதன் மீது நடவடிக்கை எடுக்காமல் அப்போதைய அமைச்சர் எவ வேலு மற்றும் அவரது மகன் சட்டவிரோதமாக மண்திருடுவதற்கும் அவர்கள் சொத்து சேர்ப்பதற்கும் வழிவகை செய்துள்ளது.

கலைஞர் திடல்" நிலம் 124.56 ஏக்கர் நிலம், 12.06.2024 அன்று ரூ.46 கோடிக்கு 'அருணை ப்ராடக்ட்ஸ் அண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்' (இயக்குனர்: எ.வ. குமரன்) என்ற நிறுவனத்தால் வாங்கப் பட்டுள்ளது.

இந்நிலத்தை விற்பனை செய்த 'ரிஷி என்டர்பிரைசஸ்' நிறுவனம், நெடுஞ்சாலைத் துறையில் பல நூறு கோடி ஒப்பந்தங்களைப் பெற்று வரும் ஒப்பந்ததாரர் பாண்டித்துரையின் நிறுவனமாகும்.

அந்த நிறுவனம் அவரது மனைவி பெயரில் உள்ளது. அவருடைய நிறுவனங்களில் சோதனையிட்ட வருமானவரித்துறை 2022ல் பல கோடி ரூபாய் கணக்கில் வராத பணம் கண்டறியப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஒரு சென்ட் நிலமே 1.5 முதல் 2 லட்சம் வரை விலை போகிறது என்று மக்கள் சொல்கிறார்கள். அப்படி இருக்க 124 ஏக்கர் நிலத்தை எப்படி வெறும் 46 கோடிக்கு நெடுஞ்சாலை துறை ஒப்பந்தத்தாரிடமே அப்போதைய நெடுஞ்சாலை துறை எவ வேலு மகன் 2024 இல் வாங்கினார் என்பது குறித்தும் பண பரிவர்த்தனை குறித்தும் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்." என்று தெரிவித்து இருக்கிறது.

நடவடிக்கை

இந்த நிலையில், அறப்போர் இயக்கம் அளித்த இந்த புகாரின் அடிப்படையில் தி.மு.க முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு மற்றும் அவரது மகன் எ.வ.குமரன் மீது லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

முன்னதாக, நெடுஞ்சாலை துறை டெண்டரில் முறைகேடு செய்துள்ளதாக எழுந்துள்ள புகாரில் எ.வ.வேலு மீது லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனாகார்க் பௌர்ணமி நிறைவடைந்ததை தொடர்ந்து திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் தூய்மைப்பணிகள் நடைபெற்று வருவதை ஆய்வு மேற்கொண்டார்.

# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (TNPSC) நடத்தும் தொகுதி தேர்வினை இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன் பார்வையிட்டு ஆய்வு

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (27.9.2026) மேல்விஷாரம் அப்துல் ஹக்கீம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இராணிப்பேட்டை அரசினர் மேல்நிலைப் பள்ளி, ஆற்காடு குளோபல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) நடத்தும் தொகுதி 1 (Group I) தேர்வினை தேர்வர்கள் எழுதுவதையும், மாற்றுத்திறனாளி தேர்வர்கள் உதவியாளருடன் எழுதுவதையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இராணிப்பேட்டை மாவட்டத்தில் இத்தேர்வானது 9 தேர்வுக் கூடங்களில் 2448 தேர்வர்கள் தேர்வு எழுத ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் 1869 தேர்வர்கள் தேர்வு எழுதினர். 579 தேர்வர்கள் தேர்வு எழுத வரவில்லை. வருகைபுரிந்தோர் சதவீதம் 76.35 சதவீதம், வருகை புரியாதோர் 23.65 சதவீதம் ஆகும்.

1 தேர்வு நடைபெறும் மையங்களை கண்காணித்திட 1 துணை ஆட்சியர், மேலும் வினாத்தாள்களை கருவூலத்தில் பாதுகாப்பாக வைப்பது, எடுத்துச் செல்வது உள்ளிட்ட பணிகளை ஒருங்கிணைத்திட வட்டாட்சியர் ஒருங்கிணைப்பாளராகவும், சுற்றுக்குழுவில் (Mobile Team) 2 துணை வட்டாட்சியர்களும், 9 வருவாய்த் துறை ஆய்வு அலுவலர்களும்.



தேர்வுமைய நடைமுறைகளை கண்காணித்திடவும், அனைத்து பணிகளும் வீடியோ பதிவுகள் செய்யும் பொருட்டு, 9 தேர்வுக் கூடங்களுக்கு தலா 1 வீடியோகிராபர் வீதம் மற்றும் மாவட்ட கருவூலத்தில் 1 வீடியோகிராபர் என மொத்தம் 10 வீடியோகிராபர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், தேர்வு மையங்களில் CCTV கேமராக்கள் பொருத்தப்பட்டு, அனைத்து நடவடிக்கைகளும் கண்காணிக்கப்பட்டது.

# செய்யாறு விஸ்டம் வித்யாஷ்ரம் இன்டர்நேஷனல் சி.பி.எஸ்.இ பள்ளியில் கேலோ இந்தியா சாஃப்ட் டென்னிஸ் விளையாட்டுப்போட்டி

செய்யாறு:செப்.28

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு விஸ்டம் வித்யாஷ்ரம் இன்டர்நேஷனல் பள்ளியில் கேலோ இந்தியா சாஃப்ட் டென்னிஸ் விளையாட்டுப்போட்டி நேற்று நடைபெற்றது. இந்திய விளையாட்டு நிறுவனம், இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம், இந்திய அமெச்சூர் சாஃப்ட் டென்னிஸ் கூட்டமைப்பு, தமிழ்நாடு சாஃப்ட் டென்னிஸ் சங்கம் சார்பில் நடத்தப்பட்ட அஸ்மிதா சாஃப்ட் டென்னிஸ் லீக் 2026 2027 விளையாட்டுப் போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றது . திருவண்ணாமலை மாவட்ட பள்ளி அளவில் நடைபெற்ற இப்போட்டியில் சுமார் 64 மாணவிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக விஸ்டம் கல்விக்குழும நிர்வாகி டி.ஜி.எம். விஜயவர்மன், வந்தவாசி வெங்கடேஸ்வரா பள்ளியின் துணை கல்வி அலுவலர் சி.வி.ரங்கநாதன் ஆகியோர் தலைமை தாங்கி சிறப்பித்தனர். திருவண்ணாமலை மாவட்ட சாஃப்ட் டென்னிஸ் சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.காளிதாஸ், விளையாட்டு ஒருங்கிணைப்பாளர் எஸ்.கார்த்திகேயன், விஸ்டம் வித்யாஷ்ரம் இன்டர்நேஷனல் பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர்கள் எஸ்.சேட்டு, ஆர்.. விக்னேஷ் இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைந்து நடத்தினர். விஸ்டம் வித்தியாஷ்ரம் பள்ளி நிர்வாகி விஜயவர்மன் பேசும்பொழுது மாணவிகளுக்காக உருவாக்கப்பட்ட அற்புதமான விளையாட்டு இது என்றும், இனிவரும் காலங்களில் பள்ளியில் உடற்கல்வி வகுப்புகள் அதிக அளவில் ஒதுக்கி தரப்படும் என்றும், பெண் பிள்ளைகளுக்கான தங்கள் உடல் வலிமையை மேம்படுத்தவும் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ள பல்வேறு போட்டிகளும் பள்ளியில் நடத்தப்படும் என்று கூறி வெற்றிபெற்ற மாணவிகளை பாராட்டி பேசினார். மாணவிகள் ஒற்றையர் பிரிவிலும் இரட்டையர் பிரிவிலும் கலந்து கொண்டு விளையாடினர். மிக மூத்தோர் ஒற்றையர் பிரிவில் கவிநிலா முதலிடமும், இரட்டையர் பிரிவில் கவிநிலா, மதுமிதா முதலிடம் பெற்றனர். மூத்தோர் இரட்டையர் பிரிவில் ஹேமாவதி, ரித்திகா முதலிடமும், மிக மூத்தோர் ஒற்றையர் பிரிவில் ஹரிணி ஸ்ரீ மூன்றாமிடமும், மூத்தோர் இரட்டையர் பிரிவில் புவனேஷ்வரி, யுவநிதி மூன்றாமிடமும், இளையோர் ஒற்றையர் பிரிவில் நவீனா முதலிடமும், இளையோர் பிரிவில் காவிய தர்ஷினி மூன்றாமிடமும், கனிஷ்கா நான்காமிடமும் பிடித்தனர். மிக இளையோர் இரட்டையர் பிரிவில் பூஜா, ஷாஷினி இரண்டாமிடமும் பிடித்தனர். மாணவிகளுக்குப் பதக்கங்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப் பட்டது. மேலும் போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் பங்கேற்றமைக்கான பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டது. பள்ளியின் துணை முதல்வர்கள் எம். வெங்கடேசன், பி.ஜெயச்சந்திரன் டாஸ் போட்டு போட்டியை தொடங்கி வைத்தனர் பள்ளி ஆசிரியர்களும் உடனிருந்தனர்.




தமிழ்நாடு பிராமண சமாஜம் சார்பாக வரும் 04.10.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று தமிழ்நாடு முழுவதும் மழை வேண்டி வருண ஜபம் யாகம் மற்றும் சிறப்பு பிரார்த்தனை நடைபெற உள்ளது அது சமயம் பழனி சண்முகநதி சாலையில் உள்ள வன்னி விநாயகர் கோவிலில் இந்த சிறப்பு யாகம் மற்றும் பூஜைகள் நடைபெற உள்ளது இதற்கு பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு தமிழ்நாடு பிராமண சமுதாய சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்




# எஸ்.கே.பி பொறியியல் கல்லூரியில் மின்னியல் துறையில் புதிய பாதை காட்டும் மாணவர் சங்கம்

திருவண்ணாமலை,செப்.28

திருவண்ணாமலை எஸ்.கே.பி பொறியியல் கல்லூரியில் மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை சார்பில் VAVEE (Valiant Association of Versatile Electrical Engineers) மாணவர் சங்க தொடக்க விழா கல்லூரி கருத்தரங்க மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு எஸ்.கே.பி கல்விக் குழும நிறுவனங்களின் தலைவர் கு. கருணாநிதி தலைமை தாங்கினார். இணைச் செயலாளர் கே.வி. அரங்கசாமி, முதன்மை நிர்வாக அதிகாரி முனைவர் ஆர். சக்தி கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் எஸ். பாஸ்கரன், மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறைத் தலைவர் ரா. ஸ்ரீதேவி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தொழில்நுட்ப வளர்ச்சிக்கு வழிகாட்டிய சிறப்பு உரைவிழாவின் சிறப்பு விருந்தினராக, கல்லூரியின் மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறையின் முன்னாள் மாணவரும், சென்னையில் செயல்பட்டு வரும் ஷ்னைடர் எலக்ட்ரிக் நிறுவன மேலாளருமான இன்ஜினீயர் ஸ்ரீனிவாசன் ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டார். அவர் “மின்னியல் பொறியியல் 2026: வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், தொழில் துறை போக்குகள் மற்றும் தொழில் வாய்ப்புகள்” என்ற தலைப்பில் சிறப்பு உரையாற்றினார்.

பொறியியல் கல்வி என்பது ஒரு வேலைக்கான தகுதியை பெறுவதற்காக மட்டுமல்லாமல், வாழ்நாள் முழுவதும் கற்றல், திறன் வளர்ப்பு மற்றும் புதிய வாய்ப்புகளை எதிர்கொள்ளும் வகையில் மாணவர்களை உருவாக்குவதாக இருக்க வேண்டும் என்றார். மேலும், வேகமாக மாறிவரும் தொழில்நுட்ப உலகில் மாணவர்கள் ஆர்வம், மாற்றத்துக்கு ஏற்ப செயல்படும் திறன், பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் திறன், தொழில்நுட்ப அறிவு மற்றும் மென் திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார்.

வகுப்பறையில் கற்றுக் கொள்ளும் கல்வியை தொழில் துறை தேவைகளுடன் இணைத்து செயல்படுவதன் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கினார். மாணவர்களின் படைப்பாற்றல் மற்றும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் வகையில் தொடங்கப்பட்டுள்ள VAVEE மாணவர் சங்கம், மின்னியல் துறையில் மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தவும், தொழில்துறை சார்ந்த புதிய வாய்ப்புகளை அறிந்து கொள்ளவும் முக்கிய தளமாக அமையும் என தெரிவிக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பேராசிரியர்கள் முனைவர் கே. ஸ்ரீனிவாசன், அமுதா, ஜெபஷாந்தினி, வித்யா, ஹேமா, பிரசன்ன ஜெயம் மற்றும் மாணவர் சங்க நிர்வாகிகள் ராஜுதன், ஜனனி, புகழேந்தி, மனோகரன், சுபா, வெற்றிவேல் உள்ளிட்டோர் செய்திருந்தனர். நிகழ்ச்சியில் ஏராளமான மாணவமாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.





# இராணிப்பேட்டையில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்

இராணிப்பேட்டை அரசினர் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியில் பொதுப் பிரிவினருக்கான கபடி போட்டிகள் நடைபெற்றன. பொது பிரிவினருக்கான கபடி போட்டியில் ஆண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களை பிடித்த வெற்றியாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கங்களை இராணிப்பேட்டை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ச.ஞானசேகரன் அவர் கள் வழங்கினார்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA